**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

<table>
<tr><td colspan="4">2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 13–ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>ராஜாங்கம்</td><td>தொழில்:</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td></td><td>சமயம்:</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி:</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**13.11.2025** **OS.41/2020** **வா.சா.1 ஆஜர்**

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் எனது பிராதில் எனது தகப்பனார் தாவா புல எண்ணில் 31 சென்டில் கீழ்புறம் 8 சென்ட் கிரயம் வாங்கியிருப்பதாக சொல்லியிருப்பதில் மொத்த சொத்தில் 8 சென்ட் உட்பிரிவு செய்யப்பட்டதா என்றால் விவசாய நிலம் என்பதால் மேற்படி 8 சென்ட்டிற்கு உட்பிரிவு எதுவும் செய்யப்படவில்லை. 8 சென்ட்டை நானோ எனக்கு முன்பு எனது தகப்பனாரோ அனுபவம் செய்து வந்ததை காட்ட தனிப்பட்ட ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள பிராதில் தாவா சொத்தை நாற்றங்காலாய் அனுபவம் செய்து வருவதாய் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 8 சென்ட் நிலத்தை யாரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் 1ம் பிரதிவாதி காந்திமதியிடமிருந்து எனது தகப்பனார் கிரயம் வாங்கினார். காந்திமதிக்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்றால் மேற்படி காந்திமதிக்கு தாவா சொத்து தாயார் லோகசிகாமணி மூலம் கிடைத்தது.

3) லோகசிகாமணிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பிள்ளைகள் ஆகும் சாட்சி தற்போது 2 பிள்ளைகள் என மாற்றி சொல்கிறார். லோகசிகாமணிக்கு இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கும்போது தாவா சொத்து காந்திமதிக்கு மட்டும் எவ்வாறு கிடைத்தது என்றால் காந்திமதியும் அவரது சகோதரியான பாகம் பிரித்துக்கொண்ட வகையில் காந்திமதிக்கு கிடைத்தது. புல எண். 78/6B ல் மொத்தம் உள்ள 31 சென்ட்டை காந்திமதியும் அவரது சகோதரி மீனாட்சியும் எவ்வாறு பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிபாகமாக இருவரும் பிரித்துக்கொண்டனர்.

4) மேற்படி புலத்தில் யாருக்கு எந்த திசையில் பாகம் கிடைத்தது என்றால் தென்புறம் காந்திமதிக்கு ஒதுக்கப்பட்டதாகும், தென்புறம் 15.5 சென்ட் ஒதுக்கினார்கள். அதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் பதிவு இல்லாத பாகப்பிரிவினை பத்திரம் உள்ளது. அந்த பாகப்பிரிவினை பத்திரம் தற்போது என் வசம் உள்ளதா என்றால் பதிவில்லாத பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்பதால் நான் வாங்கவில்லை. எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள பிராதில் மேற்கண்டவாறு பாகப்பிரிவினையில் தாவா சொத்து காந்திமதிக்கு கிடைத்தாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனது தகப்பனார் பிராதிற்கு தகவல் சொன்னதால் அது பற்றி எனக்குத் தெரியாது.

5) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 எனது தகப்பனார் கிரயம் வாங்கிய கிரயப் பத்திரத்தில் மேற்படி காந்திமதிக்கும் அவரது சகோதரிக்கும் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் தாவா சொத்து காந்திமதிக்கு கிடைத்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா புல எண். 78/6B சம்பந்தமாக இந்த நம்பர் 2ம் பிரதிவாதி வாதியாக இருந்து இந்த நம்பர் 1ம் பிரதிவாதி மீது மானாமதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.8/2008 என்ற எண்ணில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

6) மேற்படி வழக்கில் காந்திமதி என்ன எதிர்வாதம் செய்தார் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி மானாமதுரை அ.வ.எண் 8/2008 வழக்கில் எனது தகப்பனார் பிரதிவாதி தரப்பு 2 வது சாட்சியாக இருந்து காந்திமதிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்தார் என்றால் சரிதான் அது வேறு சொத்து சம்பந்தமானதாகும். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வ.சா.ஆ.1 கிரயபத்திரத்தை மேற்படி வழக்கில் பி.வா.சா.ஆ.6 ஆக எனது தகப்பனார் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல அது வேறு ஆவணம் ஆகும்.

7) என்னிடம் காட்டப்படும் ஆவணமானது எனது தகப்பனார் மேற்படி மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண். 8/2008 ல் கொடுத்த சாட்சியம் என்றால் சரிதான். **சாட்சி ஒப்புக்கொண்டதால் மேற்படி ஆவணமானது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்து காந்திமதிக்கு பாகப்பிரிவினை கிடைத்தது சம்பந்தமாக மேற்படி அ.வ.எண்.8/2008 ல் எனது தகப்பனார் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

8) தாவா சொத்தை அதன் முன் பாத்தியஸ்தரான லோகசிகாமணி அவரது மருமகனான மீனாட்சியின் கணவர் கருப்பையா பிள்ளைக்கு 21.05.1975 ம்

தேதியில் பதிவு செய்யப்பட்ட தானா செட்டில்மென்ட் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது லோகசிகாமணி அம்மாள் கருப்பையாவிற்கு எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் என்றால் சரிதான். (மேற்படி ஆவணமானது கிழிந்த நிலையில் உள்ளது). **சாட்சி ஒப்புக்கொண்டதால் மேற்படி செட்டில்மென்ட் ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

9) மேற்படி கருப்பையா பிள்ளைக்கு நான்கு மகன்கள் என்றால் சரிதான். அவர்கள் முறையே உதயமூர்த்தி, சுப்பிரமணி, ஈஸ்வரன், காளிதாஸ் ஆகியோர் ஆவார்கள் என்றால் சரிதான். உதயமூர்த்தி, சுப்பிரமணி, ஈஸ்வரன் ஆகியோர் அவர்களது மற்றொரு சகோதரரான காளிதாஸிற்கு பாகப் பாத்திய விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளனர் என்றால் சரிதான் அது மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது. எவ்வாறு மோசடி ஆவணம் என்று சொல்கிறேன் என்றால் 2004 ல் எனது தகப்பனாருக்கு கிரயம் கொடுத்த சொத்தைப் பொறுத்து 2005 ல் பாக விடுதலைப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதால் மோசடி ஆவணம் என்று சொல்கிறேன்.

10) எனது தகப்பனாருக்கு தாவா சொத்தை யார் கிரயம் செய்து கொடுத்தார் என்றால் காந்திமதி கிரயம் செய்து கொடுத்தார். எனது கட்சிப்படி வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தை சுப்பிரமணி எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான் அதில் சுப்பிரமணி சாட்சி கையொப்பம் செய்துள்ளார். சுப்பிரமணி வா.சா.ஆ.1 ஆவணத்தின் சாராம்சங்களை தெரிந்து கொண்டு சாட்சி கையொப்பம் செய்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல நானும் மேற்படி சுப்பிரமணி சாட்சி கையொப்பம் செய்தபோது உடன் இருந்தேன்.

11) அ.வ.எண்.8/2008 வழக்கில் காந்திமதி செய்த வாதமும் என் தகப்பனார் சாட்சியமும் நிராகரிக்கப்பட்டு இந்த நம்பர் 2ம் பிரதிவாதி காமாட்சிக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து காந்திமதி தாக்கல் செய்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் மேற்படி மேல்முறையீடானது தரப்பினர்கள் சமரசமானதன் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டது.

12) மேற்படி அ.வ.எண்.8/2008 வழக்கில் காந்திமதி எனது தகப்பனாரை தரப்பினாராக சேர்க்கவில்லை என்பதால் மேற்படி வழக்கு நிலைநிற்க்கதக்கதல்ல என்று கட்சி செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அந்த வழக்கிற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. அந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது எனது தகப்பனார் தன்னை

தரப்பினராக மேற்படி வழக்கில் சேர்த்துக்கொள்ள யாதொரு மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

13) தாவா மொத்த சொத்தின் விஸ்தீர்னமான 31 சென்டில் நான் சொல்லும் 8 மற்றும் 5 சென்ட் உள் அடங்கும் என்றால் சரிதான். தாவா சொத்தை காந்திமதிக்கு கிரயம் கொடுக்க யாதொரு உரிமையும் இல்லை என்பதால் தான் மேற்படி அ.வ.எண்.8/2008 ல் எனது தகப்பனார் தன்னை தரப்பினராக சேர்க்க வேண்டுமென மனு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. முந்தைய அ.வ.எண். 8/2008 ல் ஏற்பட்ட தீர்ப்பு முழுமையாக எனது தகப்பனாரை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

14) முந்தைய அ.வ.எண். 8/2008 வழக்கில் காந்திமதிக்கு தாவா சொத்தில் யாதொரு உரிமையும் இல்லையென தீர்ப்பாகியுள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் காந்திமதியிடமிருந்து உரிமை கோருவதால் மேற்படி அ.வ.எண். 8/2008 வழக்கின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு தான் செய்திருக்க வேண்டுமே ஒழிய தனியாக வழக்கு தாக்கல் செய்ய யாதொரு உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு முன் தீர்ப்பு தடை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நிலைநிற்க்க தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்க தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2025.11.13 16:54:18 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam